V.—GOVERNMENT MOTION.

CHANGE IN THE ORDER OF BUSINESS.

THE HON. SRI R. VENKATARAMAN : Mr. Speaker, Sir, I move—

"That item III, viz., Demand for Grant for Excess Expenditure in the year 1959–60 be taken up before Item II, viz., First Supplementary Statement of Expenditure for the year 1964–65 ".

The motion was put and carried.

VI.—VOTING ON DEMAND FOR GRANT OF EXCESS EXPENDITURE IN 1959-60—DEMAND No. XIII—ADMINISTRATION OF JUSTICE.

THE HON. SRI R. VENKATARAMAN : Since there is no discussion on the Demand for Grant for excess expenditure in the year 1959–60, I move the Demand.

On the recommendation of the Public Accounts Committee and with the approval of the Governor, I move—

"That the Government be granted a sum not exceeding Rs. 3,811 under Demand No. XIII—Administration of Justice—to make good the excess expenditure incurred in 1959–60 ".

The Demand was put and carried and the Grant was made.

VII.—FIRST SUPPLEMENTARY STATEMENT OF EXPENDITURE FOR 1964-65—GENERAL DISCUSSION.

* திரு. இராம. அரங்கண்ணல் : கனம் தலைவர் அவர்களே, 2 கோடியே 81 லட்சம் ரூபாய் அதிகச் செலவுக்கான துணை மானிய கோரிக்கையின்மீது பேச ஆரம்பிக்கின்ற நேரத்தில் இந்த அதிகச் செலவுகளில் உற்பத்தியைப் பெருக்குவதற்கும் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்கும், ஊழியர்களுக்கான படிகளை மாற்றி அமைப்பதற்கும் சில கூடுதல் இனங்கள் வந்திருப்பதை நான் பார்க்கிறேன். இந்த இனங்களில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை போதுமா என்பது ஒரு புறம் இருந்தாலும், இதன் மூலமாக எதிர்பார்க்கப்படுகின்ற காரியங்கள் நல்லமுறையில் நடப்பதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்று நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

விவசாயத்தைப் பொறுத்த அளவில் நாம் எப்படி காரியங்கள் ஏற்று நடத்துகிறோமோ அதை ஒட்டித்தான் நம்முடைய மாநில மக்களுடைய எதிர்கால வாழ்வு இருக்கும் என்பதை நாம் எல்லோரும் நன்றாக அறிவோம்.

அதற்கு அடுத்தபடியாக விற்பனை வரி வசூலில் நம்முடைய மாநில அரசாங்கம் தீவிர கவனம் செலுத்தி வருவதாக கடந்த சில நாட்களாக அறிந்து கொண்டு வருகிறோம். விற்பனை வரியைப் பொறுத்தவரையில் காமதேனு என்றும், கற்பக விருட்சம் என்றும் வருணிக்கிற அளவு வருமானம் வரக்கூடிய ஒரு கட்டமாகவே இதைக் கருதிக்கொண்டு இருக்கிறோம். விற்பனை வரியை ஏமாற்றுகின்ற ஆட்களிடமிருந்து எப்படியாவது பணத்தை வசூலிக்க